## சென்மதி நிலுவை


**பொதுவான போக்குகள்**

1992 ஆம் ஆண்டானது சென்மதி நிலுவை நிலைமையில் குறிப்பிடத்தக்க உறுதிப்பாட்டினைக் கண்டது. நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை சிஎஉ 1,060 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், பொது நிலுவையானது முன்னைய ஆண்டின் சிஎஉ 1,520 இலட்சம் கொண்ட திரண்ட மிகையைத் தொடர்ந்து 1992 இல் சிஎஉ 1,290 இலட்சம் கொண்ட மிகையைப் பதிவு செய்தது. இது, கொள்கை நடவடிக்கைகள் பலவற்றிற்கு காட்டப்பட்ட சாதக மான ஈடுபாடுகள், அதேபோன்று வர்த்தக மாற்று விகிதத்தின் முன்னேற்றம் என்பனவற்றின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்ததுடன் ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய கடுமையான வரட்சியின் பாதகமான தாக்கத்தி னையும் சமப்படுத்தியது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட 11 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட 20 சதவீத அதிகரிப்பு வர்த்தகப் பற்றாக்குறையை 1991 இன் சிஎஉ 7,260 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 6,850 இலட்சத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில் பணிகள் கணக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத் தினைப் பதிவு செய்ததன் மூலம் 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் பற்றாக் குறை சிஎஉ 660 இலட்சத்திலிருந்து (ரூ. 37,730 இலட்சம்) சிஎஉ 200 இலட்சத் திற்கு (ரூ. 11,970 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. தனியார் மாற்றல்களும் 1991 இன் சிஎஉ 2,930 இலட்சத்திலிருந்து (ரூ. 166,230 இலட்சம்) 1992 இல் சிஎஉ 3,300 இலட்சத்திற்கு (ரூ. 203,690 இலட்சம்) அதிகரித்த வேளையில் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் அலுவல்சார் மாற்றல்கள் சிஎஉ 1,480 இலட்சத்தி லிருந்து சிஎஉ 1,300 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையைத் தற்காலிக மதிப்பீடுகள் எடுத்துக் காட்டின.

வர்த்தகம் மற்றும் பணிகள் கணக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற் றம் அதிகரித்த மாற்றல் பெறுகைகளுடன் இணைந்து, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை 1991 இன் சிஎஉ 3,520 இலட்சத்திலிருந்து (ரூ. 199,950 இலட்சம்) 1992 இல் சிஎஉ 2,460 இலட்சத்திற்கு (ரூ. 151,560 இலட்சம்) வீழ்ச்சியடைய வழிவகுத்தது. இதன்படி மொ.உ.உ. இன் விகிதமாக நடை முறைக் கணக்குப் பற்றாக்குறை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 5.4 சத வீதத்திலிருந்து 3.6 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதனை 1992 இல் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையில் அடையப்பட்ட பாராட்டத்தக்க சாதனையாகக் கருத முடியும்.

அதேவேளை, மூலதனக் கணக்கு முன்னைய ஆண்டிற்குப் பெருமளவு முரணாக, கலப்பான தன்மைகளைக் கொண்டிருந்தது. கடந்த இரண்டு ஆண்டு களில் தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களில் குறிப்பாக வெளி நாட்டுத் தனியார் நேரடி முதலீட்டில் அவதானிக்கப்பட்ட அதிகரித்த போக்கு 1992 இலும் தொடர்ந்திருக்கையில் அரசிற்கான நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதனைவிடக் குறைவாக இருந்தன. இது செயற்றிட்ட உதவியின் பெருமளவு குறைவான பயன்பாடு காரணமாகவும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிலிருந்து 1993 இற்காகப் பெற்ற அரச தயாரிப்புத் தொழில் முயற்சிகளின் சீராக்கக் கொடுகடனினது இரண்டாவது தொகுதியான முக்கிய நிகழ்ச்சித் திட்டக் கடனிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பகிர்ந்தளிப்புக்களைப் பயன்படுத்தியமையாலும் ஏற்பட்டதாகும். நேரடி முத

## சென்மதி நிலுவை
காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.44

## சென்மதி நிலுவை — பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1988-1992

| விடயம் | சிஎஉ பத்து இலட்சம் 1988 | 1989 | 1990 | 1991(அ) | 1992(ஆ) | பத்து இலட்சம் ரூபாய்களில் 1988 | 1989 | 1990 | 1991(அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள் ... | - 568 | - 530 | - 518 | - 726 | - 685 | -24,268 | -24,050 | -28,145 | -41,252 | -42,355 |
| ஏற்றுமதிகள் ... | 1,098 | 1,207 | 1,456 | 1,491 | 1,782 | 46,985 | 56,175 | 79,481 | 84,379 | 110,052 |
| இறக்குமதிகள் ... | 1,666 | 1,737 | 1,974 | 2,217 | 2,468 | 71,253 | 80,225 | 107,626 | 125,631 | 152,407 |
| 2. பணிகள் ... | - 114 | - 123 | - 72 | - 66 | - 20 | - 4,884 | - 5,609 | - 3,904 | - 3,773 | - 1,197 |
| பெறுகைகள் ... | 306 | 315 | 391 | 439 | 487 | 13,097 | 14,597 | 21,363 | 24,897 | 30,100 |
| கொடுப்பனவுகள் ... | 420 | 438 | 463 | 505 | 506 | 17,981 | 20,207 | 25,268 | 28,669 | 31,297 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) ... | - 682 | - 653 | - 590 | - 793 | - 705 | -29,152 | -29,660 | -32,049 | -45,024 | -43,551 |
| 4 மாற்றல்கள் (தேறிய) ... | 392 | 405 | 398 | 441 | 459 | 16,775 | 18,591 | 21,659 | 25,030 | 28,396 |
| தனியார் (தேறிய) ... | 238 | 258 | 268 | 293 | 330 | 10,187 | 11,840 | 14,518 | 16,623 | 20,369 |
| அலுவல்சார் (தேறிய) ... | 154 | 147 | 130 | 148 | 130 | 6,588 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை (3+4) | - 290 | - 248 | - 192 | - 352 | - 246 | -12,377 | -11,069 | -10,390 | -19,995 | - 15,156 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறிய) ... | 194 | 216 | 344 | 475 | 341 | 8,308 | 10,566 | 18,932 | 27,172 | 20,954 |
| நேரடி முதலீடு ... | 32 | 14 | 24 | 46 | 85 | 1,382 | 633 | 1,294 | 2,633 | 5,226 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு ... | — | — | 7 | 24 | 18 | — | — | 390 | 1,329 | 1,121 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) | - 32 | - 39 | - 33 | - 18 | 18 | - 1,341 | - 1,803 | - 1,835 | - 1,005 | 1,144 |
| தனியார் குறுகிய காலம் (தேறிய) | 12 | 72 | 48 | 35 | 69 | 474 | 3,557 | 2,685 | 2,105 | 4,288 |
| அரசு நீண்ட காலம் (தேறிய) ... | 182 | 169 | 298 | 366 | 173 | 7,793 | 8,179 | 16,398 | 20,850 | 10,470 |
| உட்பாய்ச்சல் ... | 304 | 291 | 392 | 463 | 297 | 13,042 | 13,811 | 21,497 | 26,378 | 18,169 |
| வெளிப்பாய்ச்சல் ... | 122 | 122 | 93 | 97 | 124 | 5,249 | 5,632 | 5,100 | 5,529 | 7,699 |
| அரசு குறுகிய காலம் ... | — | — | — | 23 | 22 | — | — | — | 1,260 | - 1,295 |
| 7. பெறுமதி சிராககங்கள் ... | — | — | — | — | — | 7 | - 108 | 751 | 235 | 1,554 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — |
| 9. பிழைகளும் தவிர்ப்புகளும் ... | + 32 | - 34 | - 14 | + 29 | + 34 | + 723 | - 1,294 | - 1 813 | + 2,728 | + 1,838 |
| 10. மொத்த நிலுவை | — 64 | — 67 | + 138 | + 152 | + 129 | — 3,339 | — 1,905 | + 7,480 | + 10,140 | + 9,191 |
| 11. நாணய அசைவுகள் (– மிகை) ... | + 64 | + 67 | — 138 | — 152 | — 129 | + 3,339 | + 1,905 | — 7,480 | — 10,140 | — 9,191 |
| செலாவணி வீதம் ரூ/சிஎஉ | | | | | | 42.76 | 46.19 | 54.42 | 56.61 | 61.75 |
| மொ. உ. உ. இன் விகிதம் சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | - 10.93 | - 9.58 | - 8.77 | - 11.07 | - 10.00 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | - 5.58 | - 4.41 | - 3.24 | - 5.37 | - 3.58 |
| நடைமுறைக் கணக்கு, கொடைகள் நீங்கலாக | | | | | | - 8.54 | - 7.10 | - 5.46 | - 7.62 | - 5.47 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி·

குறிப்பு: நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதியின் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

லீடுகள், பட்டியலிடப்பட்ட முதலீடுகள், நீண்டகாலக் கடன்கள், தேறிய குறுகிய கால வர்த்தக நிதியிடல் என்பவற்றை உள்ளடக்கிய தேறிய தனியார் வெளி நாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் 1991 இன் சிஎஉ 870 இலட்சத்திலிருந்து (ரூ. 50,620 இலட்சம்), 1992 இல் சிஎஉ 1,900 இலட்சத்திற்கு (ரூ. 117,790 இலட்சம்) அதிகரித்தன. நேரடி வெளிநாட்டுத் தனியார் முதலீடு மட்டும் 1991 இன் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 850 இலட்சத்திற்கு 85 சதவீதத்தால் அதிகரித்தது. இது, இணைந்த தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சலுடன் சேர்ந்து சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கினைப் பலமடையச் செய்தது. எனினும், அரசிற்கான நாணயமல்லா மூலதனத்தின் உட்பாய்ச்சல்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 4,630 இலட்சத்தி லிருந்து சிஎஉ 2,970 இலட்சத்திற்கு 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. தேறிய நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சலில் ஏற்பட்ட இப்பற்றாக்குறை களுக்கு மத்தியிலும் 1992 இல் சென்மதி நிலுவை முன்னைய ஆண்டிலான சிஎஉ 1,520 இலட்சம் கொண்ட திரண்ட மிகையைத் தொடர்ந்து சிஎஉ 1,290 இலட்சம் கொண்ட திரண்ட மிகையைப் பதிவு செய்தது. இதனால் நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1991 இறுதியின் சிஎஉ 8,090 இலட்சத்தி லிருந்து 1992 இறுதியில் சிஎஉ 10,470 இலட்சத்திற்கு அதிகரித்தன. இம் மட்டத்திலான மொத்த ஒதுக்குகள் 1993 இற்காகத் திட்டமிடப்பட்ட இறக்கு மதிகளில் 4.7 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன. 1991 இறுதியின் தொடர்பான எண் தொகை 1992 இன் இறக்குமதிகளில் 3,9 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

முன்பு குறிப்பிடப்பட்டதுபோல், சென்மதி நிலுவையில் மேற்குறிப்பிடப் பட்ட அபிவிருத்திகள் பல கொள்கை மாற்றங்களினதும் சில சாதகமான புற அபிவிருத்திகளினதும் ஓர் பிரதிபலிப்பாகும். கொள்கைப் பக்கத்தில், வர்த்தகம் மற்றும் கொடுப்பனவு முறையினை மேலும் தாராளமயமாக்கியமை இவ்வாண்டின் போது வர்த்தகம், பணிக் கொடுப்பனவுகள், சொத்துக்களின் மாற்றல் என்பன மீது பெரும் தொகையான செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகளினதும் மற்றும் கட்டுப்பாடுகளினதும் தளர்த்தலை உள்ளடக்கியிருந்தது. அத்துடன், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டை உற்சாகப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட மேலதிக ஊக்குவிப்புக்கள் முதலீட்டுச் சபையின் ஆதரவின் கீழ்க் கைத்தொழில் உற்பத்தியில் சிறப்பாக ஆடைத் தொழிற்சாலைகளில் உள்ள தொழில் முயற்சிகளின் எண் ணிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு வழியமைத்தது. இதேவேளை, வர்த்தக மாற்று விகிதம் 1992 இல் 3.7 சதவீதம் கொண்ட சிறிய முன்னேற்றத் தைப் பதிவு செய்தது. ஐரோப்பாவில் ஏற்பட்ட நாணய நெருக்கடி, இவ்வாண்டின் பிற்பகுதியில் முக்கிய ஐரோப்பிய நாணயங்களிடையேயான குறுக்கு செலாவணி வீதங்களில் பெருமளவு தளம்பலை ஏற்படுத்தி வர்த்தக, செலாவணி உடன் படிக்கைகளை ஆபத்திற்குள்ளாக்கியது. எனினும் இவ்வாண்டில் ஏற்றுமதித்துறை வரவேற்கத்தக்க செயலாற்றத்தைக் காட்டி இச்சவாலை ஆற்றலுடன் எதிர் கொண்டதுபோல் தோன்றுகின்றது.

சுருங்கக் கூறின் 1992 இல் பாராட்டத்தக்க வெளிப்புறச் சாதனைகளாக வரவேற்கத்தக்க ஏற்றுமதிச் செயலாற்றம், நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு, வெளிநாட்டுத் தனியார் மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு, தொடர்ந்து மூன் றாவது ஆண்டாகச் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட பெருமளவு திரண்ட மிகை, ஒதுக்குகளிலிருந்தான இறக்குமதி இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன விளங்கின.

## சென்மதி நிலுவை வெளிப்பாடு

### வணிகக் கணக்கு

கடந்த ஆண்டின் மோசமான நிலைமைக்கு முழு மாறாக 1992 இல் வணிகக் கணக்கில் ஓர் முன்னேற்றம் காணப்பட்டது. ஏற்றுமதி வருவாய்கள் 1991 இன் சிஎஉ 14,910 இலட்சத்திலிருந்து (ரூ. 843,790 இலட்சம்) 1992 இல் சிஎஉ 17,820 இலட்சத்திற்கு (ரூ. 1,100,520 இலட்சம்) 20 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. தெங்கு மற்றும் குறிப்பிட்ட ஏனைய வேளாண்மை ஏற்றுமதிப் பண்டங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட 37 சதவீத அதிகரிப்புடன் இணைந்து, இவ்வாண்டின் முற்பகுதியில் நிலவிய கடும் வரட்சி நிலைமைகளினால் தேயிலை ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் தாக்கத்தை முழுமையாக எதிரீடு செய்தன. இறக்குமதிகளில் சிஎஉ 22,170 இலட்சத்திலிருந்து (ரூ. 1,256,310 இலட்சம்) சிஎஉ 24,680 இலட்சத்திற்கு (ரூ. 1,524,070 இலட்சம்) ஏற்பட்ட 11 சதவீத அதிகரிப்பானது இடைநிலைப் பொருட்கள் மற்றும் பார பொறி, போக்குவரத்துக் கருவி என்பனவற்றின் வடிவிலான முதலீட்டுப் பொருட்களின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பால் முக்கியமாக ஏற்பட்டதாகும். இறக்குமதிகளில் ஏற்பட்ட இவ் விரிவாக்கம், செலாவணிக் கட்டுப்பாடுகளின் குறிப்பிடத்தக்க தாராளமயமாக்கல், இறக்குமதித் தீர்வைகள் மற்றும் வரிகளின் உருவில் இறை ஊக்கக் கேடுகளைத் தளர்த்தியமை, கைத்தொழில் உற்பத்தியை உற்சாகப்படுத்துவதற்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களுக்குக் கிடைத்த ஆதரவு என்பனவற்றை ஓரளவுவிற்குப் பிரதிபலிக்கிறது. இக் காரணிகளின் இணைந்த தாக்கம் 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் வர்த்தகக் கணக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை விளைவித்தது.

### பணிகள் கணக்கு

வர்த்தகக் கணக்கிலான பாராட்டத்தக்க முன்னேற்றத்தைத் தொடர்ந்து, பணிகள் கணக்கும் முன்னைய ஆண்டைவிடக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்தது. பெறுகைகள் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலும் குறிப்பாகத் துறைமுகம், போக்குவரத்தும் காப்புறுதியும், பயணம் மற்றும் ''ஏனைய'' பணிகள் என்பவற்றில் 1992 இல் கணிசமான அதிகரிப்புக்கள் காணப்பட்டன. துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி வகையில் ஏற்பட்ட சிஎஉ 1,500 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,570 இலட்சத்திற்கு அதிகரித்த உட்பாய்ச்சல்கள் துறைமுக வருமானங்களில் ஓர் அதிகரிப்பை முக்கியமாகப் பிரதிபலித்தன. சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 24 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து பயண வகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டு, வருவாய்கள் சிஎஉ 1,400 இலட்சத்திற்கு சிஎஉ 240 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் ''ஏனைய'' பணிகள் கணக்கு மீதான உட்பாய்ச்சல்கள் சிஎஉ 100 இலட்சத்தால் சிஎஉ 1,270 இலட்சத்திற்கு அதிகரித்தன. வெளிப்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக எல்லா வகை பயணங்கள் மீதான கட்டுப்பாடுகளும் விதிகளும் நீக்கப்பட்டமையையும் கல்வி, மருத்துவம் மற்றும் ஏனைய பணிகள் சார்ந்த கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையையும் பிரதிபலித்தது. பயணக் கணக்கிலான வெளிப்பாய்ச்சல்கள் 15 சதவீதத்தால் சிஎஉ 820 இலட்சத்திற்கு அதிகரித்திருக்கையில் ''ஏனைய பணிகள்'' இன் பேரிலான வெளிக் கொடுப்பனவுகளை

## அட்டவணை 1.45

## பணிகளும் மாற்றல்களும் 1988 – 1992

| விடயம் | சிஎஉ ப. இ. | | | | | ரூ. ப. இ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 | 1991 (அ) | 1992 (ஆ) | 1988 | 1989 | 1990 | 1991 (அ) | 1992 (ஆ) |
| 1. துறைமுகம், போர்குவரத்து, காப்புறுதி ... | 5 | — 8 | 10 | 28 | 34 | 205 | — 322 | 522 | 1,588 | 2,079 |
| வரவுகள் ... | 95 | 102 | 125 | 150 | 157 | 4,057 | 4,710 | 6,816 | 8,497 | 9,722 |
| கொடுப்பனவுகள் ... | 90 | 109 | 115 | 122 | 124 | 3,852 | 5,032 | 6,293 | 6,910 | 7,643 |
| 2. பயணம் ... | — 2 | 6 | 40 | 45 | 58 | — 87 | 278 | 2,190 | 2,545 | 3,601 |
| வரவுகள் ... | 48 | 59 | 94 | 116 | 140 | 2,072 | 2,759 | 5,143 | 6,571 | 8,667 |
| கொடுப்பனவுகள் ... | 50 | 54 | 54 | 71 | 82 | 2,159 | 2,482 | 2,953 | 4,026 | 5,066 |
| 3. முதலீட்டு வருவாய் ... | — 122 | — 124 | — 123 | — 130 | — 125 | -5,266 | -5,738 | -6,685 | -7,367 | -7,694 |
| வரவுகள் ... | 52 | 46 | 68 | 40 | 48 | 2,197 | 2,106 | 3,727 | 2,259 | 2,985 |
| கொடுப்பனவுகள் ... | 174 | 170 | 191 | 170 | 173 | 7,463 | 7,845 | 10,412 | 9,626 | 10,679 |
| 3.1 இலாபங்களும், பங்கிலாபங்களும் ... | — 13 | — 13 | — 19 | — 13 | — 20 | — 581 | — 608 | - 1,006 | — 718 | 1,264 |
| வரவுகள் ... | 1 | ... | ... | 2 | 1 | 20 | 18 | 11 | 89 | 74 |
| கொடுப்பனவுகள் ... | 14 | 14 | 19 | 14 | 22 | 601 | 626 | 1,017 | 807 | 1,338 |
| 3.2 வட்டி ... | — 109 | — 111 | — 104 | — 117 | — 104 | -4,685 | -5,130 | -5,679 | -6,649 | -6,430 |
| வரவுகள் ... | 51 | 46 | 68 | 38 | 47 | 2,177 | 2,088 | 3,717 | 2,170 | 2,912 |
| கொடுப்பனவுகள் — | 160 | 156 | 172 | 156 | 151 | 6,862 | 7,219 | 9,396 | 8,820 | 9,342 |
| 4. அரச பணிகள் ... | 1 | 2 | — 3 | — 3 | — 1 | 68 | 77 | — 195 | — 170 | — 90 |
| வரவுகள் ... | 17 | 17 | 11 | 17 | 15 | 735 | 785 | 586 | 953 | 889 |
| கொடுப்பனவுகள் ... | 16 | 15 | 14 | 20 | 16 | 667 | 708 | 781 | 1,123 | 979 |
| 5. ஏனைய பணிகள் ... | 4 | 2 | 5 | — 5 | — 15 | 196 | 96 | 264 | — 369 | 908 |
| வரவுகள் ... | 94 | 91 | 93 | 117 | 127 | 4,036 | 4,237 | 5,092 | 6,616 | 7,837 |
| கொடுப்பனவுகள் ... | 90 | 90 | 88 | 122 | 112 | 3,840 | 4,141 | 4,829 | 6,985 | 6,929 |
| 6. மொத்தப் பணிகள் ... | — 114 | — 123 | — 72 | — 66 | - 20 | -4,884 | -5,609 | -3,905 | -3,773 | -1,197 |
| வரவுகள் ... | 306 | 315 | 391 | 439 | 487 | 13,097 | 14,597 | 21,363 | 24,897 | 30,100 |
| கொடுப்பனவுகள் ... | 420 | 438 | 463 | 505 | 506 | 17,981 | 20,207 | 25,268 | 28,669 | 31,297 |
| 7. தனியார் மாற்றல்கள் ... | 238 | 258 | 268 | 293 | 330 | 10,186 | 11,840 | 14,518 | 16,623 | 20,369 |
| வரவுகள் .. | 266 | 279 | 296 | 323 | 385 | 11,386 | 12,830 | 16,054 | 18,311 | 23,811 |
| கொடுப்பனவுகள் ... | 28 | 21 | 28 | 30 | 56 | 1,200 | 990 | 1,536 | 1,688 | 3,442 |
| 8. அலுவல்சார் மாற்றலகள் ... | 154 | 147 | 130 | 148 | 130 | 6,588 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 |
| வரவுகள் ... | 154 | 147 | 130 | 148 | 130 | 6,588 | 6,751 | 7,142 | 8,407 | 8,027 |
| கொடுப்பனவுகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — |
| 9. மொத்த மாற்றல்கள் ... | 392 | 405 | 398 | 441 | 459 | 16,774 | 18,591 | 21,659 | 25,030 | 28,396 |
| வரவுகள் ... | 420 | 426 | 426 | 471 | 515 | 17,974 | 19,581 | 23,195 | 26,718 | 31,838 |
| கொடுப்பனவுகள் ... | 28 | 21 | 28 | 30 | 56 | 1,200 | 990 | 1,536 | 1,688 | 3,442 |

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1991இன் நடுவர் தீர்ப்புக் கொடுப்பனவான சிஎஉ 360 இலட்சம் (ஐ.அ. டொலர்கள் 500 இலட்சம்) நீங்கலாகக் கணக்கிடுகையில் சிஎஉ 1,120 இலட்சத்திற்கு சிஎஉ 260 இலட்சத்தால் அதிகரித்தது.

இதேவேளை, முதலீட்டு வருமான உட்பாய்ச்சல்கள், இவ்விரு ஆண்டுகளுக்கிடையே சிஎஉ 400 இலட்சத்திலிருந்து சிஎஉ 480 இலட்சத்திற்கு அதிகரித்து நாட்டில் உயர்வான வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டத்தைப் பிரதிபலித்தது. அதேநேரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பினால் இலாபங்களினதும் பங்கு இலாபங்களினதும் வெளிச் செல்லும் பணஅனுப்பல் அதேயளவால் சிஎஉ 140 இலட்சத்திலிருந்து சிஎஉ 220 இலட்சத்திற்கு அதிகரித்தது. சிஎஉ 50 இலட்சத்தால் சிஎஉ 1,510 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வட்டிக் கொடுப்பனவுகளுடன், முதலீட்டு வருமானத்தின் பேரிலான மொத்த வெளிப்பாய்ச்சல்கள் ஏறத்தாழ முன்னைய ஆண்டின் அதே மட்டத்தில் சிஎஉ 1,730 இலட்சத்தில் மாற்றமின்றி இருந்தன. இம் மாற்றங்களின் இணைந்த விளைவு பணிகள் கணக்கைப் பலப்படுத்தி, கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களை உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு கூடியளவில் எதிரீடு செய்தமையை எடுத்துக் காட்டியது.

**மாற்றல்கள் கணக்கு**

முன்பு குறிப்பிட்டதைப் போல், அதிகரித்த தனியார் பண அனுப்பல்கள் காரணமாக 1992 இல் மாற்றல்கள் கணக்கில் மேலும் ஓர் முன்னேற்றம் காணப்பட்டது. தனியார் மாற்றல் பெறுகைகள் 1991 இன் சிஎஉ3,230 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,850 இலட்சத்திற்கு அதிகரித்து, முன்னைய ஆண்டின் மட்டத்தைவிட 19 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. இதேவேளை, இவ்வாண்டின் நடுப்பகுதியில் வதிவற்ற இலங்கையரின் சொத்து மாற்றல்களின் மீதான கட்டுப்பாடுகளின் தளர்வு 1991 இற்கும் 1992 இற்கும் இடையே வெளிப்பாய்ச்சல்கள் சிஎஉ 300 இலட்சத்திலிருந்து சிஎஉ 560 இலட்சத்திற்குக் கணிசமாக அதிகரிக்க வழியமைத்தது. எனினும், உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அதிகரித்த வெளிப்பாய்ச்சலை எதிர்கொள்ளப் போதுமானதைவிட அதிகமாக விளங்கியதால் தனியார் மாற்றல்களிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 2,930 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,300 இலட்சத்திற்கு 12 சதவீதத்தால் விரிவடைந்தது. உட்பாய்ச்சலில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு, வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் அளவில் ஏற்பட்ட விரிவாக்கத்தாலும், நாட்டின் நிதியியல் உறுதியில் வெளிநாட்டிலுள்ள இலங்கை வேலையாட்கள் அதிகளவில் நம்பிக்கை வைத்தமையாலும் மற்றும் கவர்ச்சிகரமான உள்நாட்டு வட்டி வீதங்களினாலும் ஏற்பட்டது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் அலுவலக மாற்றல்கள் சிஎஉ 1,480 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,300 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் வீழ்ச்சிக்கு மத்தியிலும், மாற்றல்கள் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல் 1991 இற்கும் 1992 இற்கும் இடையே சிஎஉ 4,410 இலட்சத்திலிருந்து சிஎஉ 4,590 இலட்சத்திற்குப் பொதுவான அதிகரிப்பைக் காட்டின.

**நடைமுறைக் கணக்கு**

வர்த்தகம், பணிகள் மற்றும் மாற்றல் கணக்குகளின் திருப்திகரமான செயலாற்றம், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1991 இன் சிஎஉ 3,520

இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 2,460 இலட்சத்திற்குக் குறுகிவிட்டமையைக் காட்டியது. மொ.உ. உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் பற்றாக்குறை 5.4 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொடைகள் நீங்கலான இவ்விகிதமும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 7.6 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்கு ஒரு சதவீதத்திற்கும் கூடுதலான புள்ளியினால் வீழ்ச்சியடைந்தது. நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி 1992 இன் சென்மதி நிலுவைத் தோற்றத்தில் மிகவும் வரவேற்கத்தக்க முன்னேற்றங்களில் ஒன்றாக விளங்கியது.

**மூலதனக் கணக்கு**

1991 இற்குப் பெருமளவு மாறாக 1992 இல் மூலதனக் கணக்குச் சாதகமான, பாதகமான அபிவிருத்திகள் இரண்டினையும் பிரதிபலித்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்கள் சிஎஉ 4,750 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,410 இலட்சத்திற்குக் குறைவடைந்து 28 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இவ் வீழ்ச்சிக்கு, அரசிற்கான சலுகை மற்றும் சலுகையற்ற இரு வடிவங்களிலுமான உதவியின் உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முழுக் காரணமாகும். இவ்வகையில் முக்கிய உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கி (சிஎஉ 930 இலட்சம்), பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (சிஎஉ 540 இலட்சம்), யப்பான் (சிஎஉ 410 இலட்சம்) என்பனவற்றிலிருந்து கிடைத்ததுடன் இதில் மிகப்பெரும் பங்கு செயற்றிட்டக் கடன்கள் வடிவில் காணப்பட்டது. அதேவேளை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 970 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,240 இலட்சத்திற்கு அதிகரித்தன. அத்துடன் 1991 இல் நடுவர் தீர்ப்பனவுக் கொடுப்பனவான ஐ.அ. டொலர் 500 இலட்சத்தின் பகுதிக் கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட ஐ.அ. டொலர் 300 இலட்சம் (சிஎஉ 220 இலட்சம்) கொண்ட குறுங்கால இடைக்காலக் கடன் மீளச் செலுத்தப்பட்டதுடன் இது ஐ.அ. நாடுகளின் கடல்கடந்த தனியார் முதலீட்டுக் கூட்டுத்தாபனத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட நீண்டகாலக் கடனின் மூலம் பதிலிடப்பட்டது.

அரசிற்கான வெளிநாட்டுக் கடன்களின் பகிர்ந்தளிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பெருமளவு மாறாக, நேரடி முதலீடுகள், நீண்டகாலக் கடன்கள் ஆகிய இரண்டினையும் கொண்ட தேறிய தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது. 1991 இற்கும் 1992 இற்கும் இடையில் பட்டியலிடப்பட்ட முதலீடு சிஎஉ 240 இலட்சத்திலிருந்து சிஎஉ 180 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடும் அதேபோன்று நடைமுறையிலுள்ள மக்கள் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அண்மையில் தனியார் மயமாக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளினது பங்குகளின் கொள்வனவும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து சிஎஉ 850 இலட்சத்திற்கு அதிகரித்தன. அதேவேளை, உட்பாய்ச்சல்கள் நிதியிடலுக்கான கடன்களின் வடிவிலும் வெளிப்பாய்ச்சல்கள் 1992 இல் எயர் லங்காவின் வானூர்திகளை மீள அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் பேரிலான படிப்படியான கொடுப்பனவுகளின் வடிவிலும் காணப்பட்டன. அத்துடன் முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகளுக்கான கடன் மூலதனம் அதேபோன்று ஸ்ரீ லங்கா ரெலிகொம் மற்றும் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை என்பனவற்றின் உள்ளார்ந்த அமைப்பு அபிவிருத்தியின் வெளிநாட்டு

நிதியிடல் என்பன தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 1991 இன் சிஎஉ 630 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 1,100 இலட்சத்திற்கு குறிப்பிடத் தக்களவில் அதிகரிக்க வழி வகுத்தன. இதன் விளைவாக, 1991 இன் சிஎஉ 180 இலட்சம் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு மாறாக 1992 இல் சிஎஉ 180 இலட்சம் கொண்ட தனியார் நீண்டகால மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் காணப்பட்டது. தனியார் குறுங்கால மூலதனத்தின் தேறிய பயன்பாடு 1991 இற்கும் 1992 இற்குமிடையில் சிஎஉ 350 இலட்சத்திலிருந்து சிஎஉ 690 இலட்சத் திற்கு அதிகரித்தது. உட்பாய்ச்சலில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறுங்கால வர்த்தகக் கொடுகடன் நீங்கலான மற்றையவற்றின் குறுங்கால வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

### வெளிநாட்டுச் சொத்துக்கள்


இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1991 இறுதியின் சிஎஉ 8,090 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் சிஎஉ 10,470 இலட்சத்திற்கு உயர்வடைந்து 29 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இது 1992 இன் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் தொடர்புற்ற மேலதிக ஒதுக்குகளையும் ப.நா. நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர் புற்ற சிஎஉ 580 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பு 38 சதவீதத்தினால் உயர்வடைந்த மத்திய வங்கியின் வெளிநாட் டுச் சொத்துக்களிலும் 19 சதவீதத்தினால் விரிவடைந்த வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களிலும் பிரதிபலித்தது. மாறாக, அரசினால் வைத்திருக் கப்பட்ட சொத்துக்கள் 1991 இறுதிக்கும் 1992 இறுதிக்கும் இடையில் சிஎஉ 270 இலட்சத்திலிருந்து சிஎஉ 230 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதே வேளை, மத்திய வங்கியினாலும் அரசினாலும் வைத்திருக்கப்பட்ட வெளி நாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 5,030 இலட்சத்திலிருந்து சிஎஉ 6,810 இலட் சத்திற்கு அதிகரித்தன. 1992 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இற்காகத் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 4.7 மாதங்களுக்கு நிதி யிடப் போதுமானதாக இருந்தவேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 3.1 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன.

### செலாவணி வீத அசைவுகள்

1992 இல் இலங்கை ரூபாவின் பெறுமதி ஐ.அ. டொலர், யப்பானிய யென் என்பன நீங்கலாக ஏனைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தளம்பலுற்றது. இது ஆண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பாவில் ஐ.அ. டொலருக்கெதிராகக் குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாணயங்கள் குறிப்பாக ஸ்டேலிங் பவுண் தேய்வடைந்தமையால் அங்கு ஏற்பட்ட நாணய நெருக்கடி யின் ஓரளவு பிரதிபலிப்பாகும். இப் பின்னணியில், இலங்கை ரூபாவானது இடையீட்டு நாணயமான ஐ.அ. டொலர், யப்பானிய யென் என்பனவற்றிற் கெதிராக ஆண்டு முழுவதும் தேய்வடைந்திருந்தவேளையில் ஸ்டேலிங் பவுண், டியூச் மார்க், பிரான்சிய பிராங் என்பனவற்றிற்கெதிரான அசைவுகள் முதலில் ஒகத்து வரை குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பிரதிபலித்ததுடன் அதனைத் தொடர்ந்து நவெம்பர் வரை உயர்வடைந்து அதன் பின்னர் இவ்வசைவு

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.46

## இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988—1992

| உடைமையாளர் (கால முடிவில்) | சி. எ. உ. பத்து இலட்சத்தில் (அ) | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
| 1. அரசு (ஆ) ... | 13.3 | 32.3 | 19.3 | 26.7 | 23.4 | 589.8 | 1,6 6.1 | 1,104.5 | 1,631.6 | 1,482.1 |
| 2. அரச முகவர் நிலையங்கள் ... | — | — | — | — | — | 0.9 | 1.0 | 1.1 | 1.1 | 1.0 |
| 3. மத்திய வங்கி ... | 193.0 | 191.3 | 286.3 | 475.9 | 657.9 | 8,575.0 | 9,962.5 | 16,399.2 | 28,956.9 | 41,591.7 |
| 4. வர்த்தக வங்கிகள் ... | 221.8 | 223.2 | 296.4 | 306.2 | 365.7 | 9,859.7 | 11,729.9 | 16.966.8 | 18,633.4 | 23,160.7 |
| 5. மொத்தம் ... | 428.1 | 446.8 | 602.0 | 808.8 | 10,47.0 | 19,025.4 | 23,389.5 | 34,471.6 | 49,233.0 | 66,235.5 |
| 6. மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| 6.1 வணிக வர்த்தக இறக்குமதிகள் | 3.1 | 3.1 | 3.7 | 4.4 | 5.1 | | | | | |
| 6.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி ... | 2.5 | 2.5 | 3.0 | 3.6 | 4.2 | | | | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணயநிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப் பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ ஒன்றுக்கு ரூபா | 44.45 | 52.57 | 57.25 | 60.85 | 63.33 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் சுழல்வுக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985இலிருந்தான எண்தொகைகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன.

களில் மாறான போக்கு பதிவு செய்யப்பட்டது. இம்மாற்றங்களின் பொதுவான தாக்கமாக 1991 இறுதியிலிருந்து 1992 இறுதி வரை இலங்கை ரூபாவானது யப்பானிய யென் (8.4 சதவீதம்), ஐ.அ. டொலர் (7.4 சதவீதம்), பிரான்சிய பிராங்கு (2.3 சதவீதம்), டியூச் மார்க் (1.9 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராகத் தேய்வடைந்தது. அதேவேளை 1991 இறுதிக்கும் 1992 இறுதிக்குமிடையில் இலங்கை ரூபாவானது ஸ்டேலிங் பவுணுக்கெதிராக 14.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இதன்படி இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் இலங்கை ரூபாவானது சிஎஉ விற்கெதிராக 3.9 சதவீதத்தினால் தேய்வடைந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கை ரூபாவானது இந்திய ரூபாவிற்கெதிராக 6.7 சதவீதம் கொண்ட தேய்வினைப் பிரதிபலித்தது.

இச் செலாவணி வீத அசைவுகளின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் விதத்தில், முக்கிய வர்த்தகப் பங்காளர் தொடர்பான வர்த்தக நிறையேற்றப்பட்ட செலாவணி வீதமென வரைவிலக்கணம் செய்யப்பட்ட இலங்கையின் பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதம் 1991 திசெம்பரிலிருந்து 1992 திசெம்பர் வரை புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 2.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பணவீக்க வேறுபாடுகளுக்காகப் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினைச் சீராக்கம் செய்ததன் மூலம் பெறப்பட்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் இவ்வாண்டில் இதே அடிப்படையில் 0.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் மேற்குறிப்பிட்ட உயர்வு காணப்பட்டபோதும் 1992 இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் ஆண்டுச் சராசரி 6.6 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் ஆண்டுச் சராசரி 4.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வெளிநாட்டுப் படுகடன்**

1992 இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 50,290 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1991 இறுதிக்கும் 1992 இறுதிக்குமிடையில் சிஎஉ 4,270 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. முன்னைய ஆண்டிற்கு மாறாக, இவ்வதிகரிப்பில் பெரும் பங்கு தனியார் துறையின், குறிப்பாக எயர் லங்கா உள்ளடங்க முதலீட்டுச் சபையின் கீழ்வரும் தொழில் முயற்சிகளின் நடுத்தர நீண்டகாலப் படுகடனில் பிரதிபலித்தது. அதேவேளை அரசின் நடுத்தர, நீண்டகாலப் படுகடன் சிஎஉ 35,940 இலட்சத்திலிருந்து சிஎஉ 38,440 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றிலிருந்தான சலுகை உதவிகளின் பகிர்ந்தளிப்புக்களே முக்கிய காரணமாகும். இதேவேளை பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து அதிகரிக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதி ஒழுங்கின் கீழ் சிஎஉ 1,120 இலட்சம் கொண்ட இரு தொகுதிகள் வழங்கப்பட்டமையினதும், ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தமையின் பொருட்டு இழப்பீட்டு நிதியிடல்

அட்டவணை 1.47

## செலாவணிவீத அசைவுகள் 1988 — 1992

| நாணயம் | அலகு ஒன்றிற்கு ரூபாய்களில் ஆண்டு இறுதி வீதங்கள் | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
| டியுச் மார்க் ... | 18.4794 | 23.7002 | 26.1554 | 28.0178 | 28.5714 | 4.35 | — 22.03 | — 9.39 | — 6.65 | — 1.94 |
| பிரான்சிய பிராங்கு ... | 5.4121 | 6.9354 | 7.7125 | 8.1924 | 8.3857 | 5.20 | — 21.96 | — 10.08 | — 5.86 | — 2.31 |
| இந்திய ரூபாய் ... | 2.1848 | 2.3603 | 2.2332 | 1.6352 | 1.7520 | 10.05 | — 7.44 | 5.69 | 36.57 | — 6.67 |
| யப்பானிய யென் ... | 0.2631 | 0.2816 | 0.2943 | 0.3390 | 0.3699 | — 5.32 | — 6.58 | — 4.29 | 13.19 | — 8.37 |
| ஸ்டேர்லிங் பவுண் ... | 59.0786 | 65.0400 | 75.5908 | 79.5820 | 69.4278 | — 3.23 | — 9.17 | — 13.96 | — 5.02 | 14.63 |
| ஐ. அ. டொலர் ... | 33.0325 | 40.0000 | 40.2400 | 42.5800 | 46.0000 | — 6.87 | — 17.42 | — 0.60 | — 5.50 | — 7.43 |
| சிஎஉ ... | 44.2820 | 52.9300 | 57.2479 | 60.8464 | 63.3337 | — 2.29 | — 16.34 | — 7.54 | — 5.91 | — 3.93 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

## தாக்கமுள்ள செலாவணி விதங்கள்*

காலாண்டுச் சராசரிகள்

1985 = 100




இலங்கை மத்திய வங்கி.

*வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது.

## அட்டவணை 1.48

### பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப் படுகடன் 1988–1992

| விடயம் | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | ரூபா பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 | 1991 (அ) | 1992 (ஆ) | 1988 | 1989 | 1990 | 1991(அ) | 1992 (ஆ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் ... | 3,531 | 3,642 | 3,828 | 4,252 | 4,630 | 155,353 | 190,802 | 217,151 | 256,120 | 290,064 |
| 1.1 அரசு (அ) ... | 2,848 | 2,976 | 3,190 | 3,594 | 3,844 | 126,230 | 157,520 | 182,606 | 218,722 | 243,449 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான பொதுக் கூட்டுத்தாபனங்கள் ... | 182 | 154 | 136 | 141 | 176 | 8,137 | 8,136 | 7,781 | 8,578 | 11,121 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை ... | 112 | 108 | 108 | 120 | 129 | 4,359 | 6,035 | 6,185 | 7,319 | 8,173 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற பொதுக் கூட்டுத்தாபனங்கள் ... | 7 | 6 | 5 | 3 | 2 | 284 | 341 | 290 | 197 | 151 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார் துறை ... | 128 | 123 | 101 | 113 | 142 | 5,482 | 6,516 | 5,802 | 6,867 | 8,971 |
| 1.6 ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 254 | 275 | 288 | 280 | 338 | 10,861 | 12,255 | 14,488 | 14,437 | 18,199 |
| 2. குறுங்காலப் படுகடன் ... | 179 | 297 | 294 | 350 | 399 | 7,252 | 13,210 | 16,820 | 20,201 | 23,215 |
| 2.1 அரசு ... | — | — | — | 21 | — | — | — | — | 1,275 | — |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... | 5 | 50 | — | — | — | 231 | 2,632 | — | — | — |
| 2.3 ஏனையவை (இ) (அ) ... | 174 | 246 | 294 | 329 | 399 | 7,021 | 10,578 | 16,820 | 18,925 | 23,215 |
| 3. மொத்தப் படுகடன் (1+2) ... | 3,710 | 3,939 | 4,122 | 4,602 | 5,029 | 162,605 | 204,012 | 233,971 | 276,320 | 313,279 |
| ஒப்பந்தக் குறிப்பு வகைகள் நடுத்தர நீண்டகால கடன்கள் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் ... | 1,907 | 2,050 | 2,179 | 2,393 | 2,556 | 84,427 | 108,521 | 124,775 | 145,631 | 161,873 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 942 | 926 | 1,010 | 1,177 | 1,[illegible]51 | 41,703 | 48,998 | 57,832 | 71,600 | 79,234 |
| (3) நிரம்பலர் கொடுகடன் ... | 25 | 20 | 33 | 30 | 48 | 1,109 | 1,046 | 1,892 | 1,805 | 3,049 |
| (4) ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 18 | 9 | 6 | 6 | 6 | 813 | 479 | 325 | 322 | 348 |
| (5) ப.நா.நி.–ஏனைய கடன்கள் ... | 254 | 275 | 288 | 280 | 338 | 10,861 | 12,255 | 14,488 | 14,437 | 18,199 |
| (6) ஏனைய கடன்கள் (ஈ) ... | 386 | 362 | 312 | 367 | 432 | 16,440 | 19,502 | 17,840 | 22,324 | 27,361 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

(அ) திருத்தப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்எற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளுக்கான வர்த்தக கொடுகடன்களையும் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் தனியார் துறையின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

வசதியின் கீழ் முன்னர் பெறப்பட்ட சிஎஉ 540 இலட்சம் கொண்ட கடன் மீளச் செலுத்தப்பட்டமையினதும் காரணமாகப் பன்னாட்டு நாணயத்திற்கான வெளிநின்ற படுகடன் 1991 இறுதிக்கும் 1992 இறுதிக்குமிடையில் சிஎஉ 2,800 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,380 இலட்சத்திற்கு அதிகரித்தது. முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போன்று சிஎஉ 220 இலட்சம் கொண்ட அரசின் வெளிநின்ற குறுங்காலக் கடன் மீளச் செலுத்தப்பட்டதுடன் இது இவ்வாண்டில் மாச்சில் இதே தொகையினைக் கொண்ட நடுத்தரக் காலக் கடன் மூலம் பதிலிடப்பட்டது. அதேவேளை, ஏனைய அனைத்து குறுங்காலப் படுகடன்களினதும் வெளிநின்ற மட்டம் 1991 இறுதிக்கும் 1992 இறுதிக்கும் இடையில் சிஎஉ 3,290 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,990 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற குறுங்காலக் கடன்பாடுகள் 1991 இறுதியில் காணப்பட்ட அதே மட்டங்களில் நிலைத்திருந்த வேளையில், உயர்ந்த கடன்பாடுகள் முக்கியமாக, முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளுக்கான இறக்குமதிக் கொடுகடனும் 1991 இல் முதலீட்டுச் சபையல்லா தொழில் முயற்சிகளுக்கு வெ.நா.வ. பிரிவின் கடன்பாட்டு வசதி விரிவாக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்றுமதியாளர்களுக்கு வெ.நா.வ. பிரிவிலிருந்து கிடைத்த குறுங்காலக் கடன்களும் அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்டன.

### படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நடுத்தர, நீண்டகாலக் கடன்களின் கடன் தீர்ப்பனவு, அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் மீதுமான வட்டிக் கொடுப்பனவு என்பனவற்றை உள்ளடக்கிய இலங்கையின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் சிஎஉ 230 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 3,790 இலட்சத்திற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பு முழுவதும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளிலேயே பிரதிபலித்தது. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவின் முழு அதிகரிப்பும் ப.நா. நிதியமல்லா கடன்களின் மீள் கொடுப்பனவின் பேரிலேயே ஏற்பட்டது. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 280 இலட்சத்தினால் அல்லது 14 சதவீதத்தினால் சிஎஉ 2,280 இலட்சத்திற்கு அதிகரித்திருந்த வேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,510 இலட்சத்திற்கு சிஎஉ 50 இலட்சத்தினால் அல்லது 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அரசு, தனியார் துறை இரண்டினதும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் இதே கொடுப்பனவுகளை விடக் கூடுதலாக அதிகரித்தன. வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ப.நா. நிதியத்திற்கான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியில் முழுவதாகப் பிரதிபலிக்கப்பட்டது. எனினும் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகப் படுகடன் பணி விகிதம் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 18.5 சதவீதத்திலிருந்து16.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருட்கள், பணிகள் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வரவுகளின் விகிதமாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 15.8 சதவீதத்திலிருந்து 14.3 சதவீதத்திற்கு 1 சதவீதப் புள்ளிக்கும் கூடுதலாக வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1.49

### வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1988 — 1992

| விடயம் | சி எ உ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 | 1991(அ) | 1992 (ஆ) | 1988 | 1989 | 1990 | 1991(அ) | 1992 (ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 402.8 | 374.7 | 328.5 | 356.3 | 379.3 | 17,207 | 17,138 | 17,971 | 20,173 | 23,478 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 258.8 | 217.3 | 182.0 | 200.5 | 228.0 | 11,033 | 9,920 | 9,975 | 11,354 | 14,137 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 64.1 | 46.0 | 31.8 | 63.6 | 54.4 | 2,682 | 2,018 | 1,731 | 3,600 | 3,359 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 194.7 | 171.3 | 150.2 | 136.9 | 173.6 | 8,351 | 7,902 | 8,244 | 7,753 | 10,777 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 144.0 | 157.4 | 146.6 | 155.8 | 151.3 | 6,174 | 7,218 | 7,997 | 8,820 | 9,342 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 18.5 | 22.7 | 20.6 | 14.7 | 7.5 | 772 | 997 | 1,121 | 830 | 481 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 125.5 | 134.7 | 126.0 | 141.1 | 143.5 | 5,402 | 6,221 | 6,876 | 7,990 | 8,861 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் ... | 1,404.0 | 1,522.4 | 1,847.3 | 1,925.5 | 2,268.9 | 60,082 | 70,772 | 100,844 | 109,275 | 140,152.1 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 1,670.6 | 1,801.6 | 2,143.7 | 2,252.6 | 2,654.2 | 71,468 | 83,602 | 116,898 | 127,586 | 163,962.6 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (இ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 28.7 | 24.6 | 17.8 | 18.5 | 16.7 | 28.6 | 24.2 | 17.8 | 18.5 | 16.7 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து ... | 22.8 | 20.1 | 14.9 | 14.4 | 14.0 | 22.9 | 20.0 | 15.0 | 14.4 | 14.0 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 24.1 | 20.8 | 15.3 | 15.8 | 14.3 | 24.1 | 20.5 | 15.4 | 15.8 | 14.3 |
| (ii) ப. நா. நி கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த ... | 19.2 | 17.0 | 12.9 | 12.3 | 12.0 | 19.2 | 16.9 | 12.9 | 12.3 | 12.0 |
| 5. மேலே உள்ள 1இல் அரசின் பங்கு (ஈ) ... | 191.4 | 196.3 | 168.0 | 178.0 | 226.8 | 8,214 | 9,066 | 9,141 | 10,075 | 14,008 |
| 5.1 மேலே உள்ள 1இன் சதவீதமாக ... | 47.5 | 52.4 | 51.1 | 49.9 | 59.8 | 47.7 | 52.9 | 50.9 | 49.9 | 59.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) ரூபாப் பெறுமதிகளையும் சி எ உ. பெறுமதிகளையும் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(ஈ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து.